T-UN-H72

உ

சிவமயம்.

சண்பகாரண்ய க்ஷேத்திரமென்னும்

தென்றுவாரகையாகிய இராஜமன்னார்குடியிற்

றிருக்கோயில்கொண் டெழுந்தருளிய

# ஸ்ரீமத்-சூட்டுக்கோல்

# இராமலிங்கசுவாமிதோத்திரப்பதிகங்கள்.

இஃது

கோயிலூர் பரம்பரை சாய்க்கைமாநகரம்

ஸ்ரீமத் வீரசேகரஞானதேசிகமூர்த்திகள் மாணாக்கராகிய

ஸ்ரீமத்-மௌனம் இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

இவை,

ஷை சுவாமிகள் மாணாக்கர்களாகிய

வீ. குட்டிமுதலியார்,

பி. ஏ. மாசிலாமணிப்பிள்ளை,

இவர்கள் வேண்டுகோளின்படி

தஞ்சை

ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விகாரிஸு தைமீ

# முகவுரை.

நீர்வளம்பொருந்திய சோழநாட்டின்கண் பூமிதேவிக்குத்திருமுக
மாய்விளங்காநின்ற தெக்ஷிண துவாரகாபுரியென்றும் சண்பகாவன
க்ஷேத்திரமென்றும் பெயர்பெற்ற ராஜமன்னார்குடியில் சுமார் ௱௫௰-
வருஷத்திற்குமுன் அஷ்டமாசித்திமுதலாகிய மகா அற்புதங்களியற்
றியுந்திருவுருக்கரந்திவ்வூருக் கீசானிய மூலையிற்சமாதியாகித் திருக்
கோயில் கொண்டெழுந்தருளியிராநின்ற ஸ்ரீமத் அகண்டபரிபூரண
சித்கனானந்தமாய் விளங்கும் ஸ்ரீமத் சூட்டுக்கோலிராமலிங்க சுவாமி
களின் ஆலயத்திற்கியாவரேனும் சென்று தெரிசித்தல் அல்லது இரு
ந்தவிடத்திலிருந்துந் தமக்கு ஆகவேண்டிய குறைகளை நிவர்த்திக்கு
ம்படி நேர்ந்துகொண்டும் பொருளைத் தக்ஷிணைமூலமாயுண்டியலில் சம
ர்ப்பித்துங் கோதானம் பூதானமுதலிய பலவித தானதருமங்களியற்
றியும்ஷை பரமதயாநிதியான சற்குருவாகிய மகாலிங்கத்திற்குப் பூர
ணவிருப்பத்தோடபிஷேக வாராதனை செய்துமவ்விடத்துறும்பக்தகு
ழாங்கட்குப்பலவித சித்திரான்னங்களருத்துவித்தும் நாடோறுமிவ்வ
ண்ணமாகக்குருபூசனை புரிந்தும் முடியிறக்கலங்கப் பிரதக்ஷணஞ்செ
ய்தல் காவடியெடுத்தல் முதலிய பலவித காணிக்கைகள் செலுத்தியுந்
தாம் கோரிய வண்ணமிஷ்டப் பிராப்தியையடைதற்பொருட்டு, பரசி
வமே ஸ்ரீஇராமலிங்கசுவாமியென நாமதேயம்பூண்டு வந்த ஷை குரு
சுவாமி பேரில் தோத்திரப்பாமாலை செய்யும்படி அடியார்கள் வேண்
டுகோளின் நிமித்தம் திருவருளை முன்னிட்டு ஷை சுவாமிகளின்
பிரேரணையால் திருவாய் மலர்ந்தருளிய, ஸ்ரீராமலிங்கேசப்பதிகம் (க)
தோத்திரம் பண்-நட்டராகத்தில் (க) பண்-திருநேரிசையில் (க) பண்
திருத்தாண்டகத்தில் (க) பண்-காம்போதி அடதாளத்தில் (க) இவ்
வைந்து தோத்திரப்பதிகங்களை, பாக்குபேட்டைத்தெரு கோவிந்த
பிள்ளை குமாரனும் பூவிருந்தவல்லி சப்மாஜிஸ்திரேட்டாரவர்களாகிய
பி. ஏ. மாசிலாமணிபிள்ளையவர்கட்கோர் கொடிய நோயொன்று சம்ப
வித்து ஷை ஆலயத்திற்கு மிகசந்தோடமாக அபிஷேக ஆராதனைமுத
லிய குருபூசை செய்த அந்தக்ஷணமே அந்நோய் நீங்கின நிமித்தமித்

தோத்திரப்பாக்களை ஷை பிள்ளையவர்கள்கேட்டுக்கொண்டதின்பேரில் அச்சிட்டனன்.

இஃது குருசுவாமிபேரில் சொல்லிய பாக்களாகையாலும் இதைச்செய்தவர் இலக்கிய இலக்கணங்கல்லாதபரதேசியாகையாலுங்குற்றக்களிருப்பினும் கற்றவர்களும் நற்றவர்களும் பொறுப்பரொன்பது நிச்சயம்.

இப்படிக்கு,
மௌனம்-இராமலிங்கசுவாமிகள்
மாணாக்கன்
வீ. துட்டிமுதலியாரடியேன்.

---

## சாத்துகவி.

மன்னார்குடி முனிசிபாலிட்டி ஓவர்சீயருமாகிய
பட்டைக்காரத்தெரு மகா-ா-ஸ்ரீ
ஆ. அழகப்பெருமாள்பிள்ளையவர்களியற்றிய
ஆசிரியவிருத்தம்.

ஒப்பிகந்திலங்குஞ் செண்பகா ரணியத்
துறுபரன் செங்கையிற் சுடுகோல்
துப்புறத் தரிக்கும் ஆதவன்ராம
லிங்கமாத் தூயவன் றனக்கோர்
தப்பில்பல் செயுளாற் றோத்திரப் பெரும்பாத்
தாரினைச் சாற்றின னெவரும்
அப்பரோ ராமலிங்கமென் றோதும்
அருந்தவ மௌனியா மவனே.

---

உ

ஓம் கணேசாயதநுவே நம:

ஸ்ரீமத்–சூட்டுக்கோல்

# இராமலிங்கசுவாமி தோத்திரப் பதிகங்கள்

---

காப்பு-நேரிசைவெண்பா.

சீரேறு நீர்வளங்கொள் தென்றுவணா யென்றேறுதுங்
காரேறு சண்பகமார் கானிலுறை—கூறேறு
சூட்டுக்கோல் ராமலிங்க சொச்சொருப தேசிகற்காம்
பாட்டுக்கோ ளைங்கரன்காப் பாம்.

கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆதியே ஆதிநடு வந்தமு மிலாததா யறிவா
யகண்டவடிவாய்
அணுவுக்கு ளணுவாகி யண்டங்க ளுக்கெலா
மாதார அசல வடிவாம்
நீதியே சுத்தனே புத்தனே முத்தனே
நித்தனே நிட்பிரபஞ்ச
நிட்கள நிராதார சற்குருவ தாய்வந்த
நிர்மலானந்த வடிவச்
சோதியே சோதிக் கதீதனே யெங்குநிறை
துணைவனே நின்னடி தொழுந்

தொண்டருக் கருள்புரியு மண்டருக் கரசனே
தொழும்ப னியான்சொலுந் தோத்திரச்
சேதியைக் கேட்டெனது தீவினை யகற்றியருள்
தேவனே பரமேசனே
செண்பமலர் மணம்வீச தென்றுவரை நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே. (க)

நித்திய நிராகார நிர்க்குண நிராலம்ப
நிர்விஷயகைவல்யமாய்
நிர்ச்சீவ நிர்த்தொந்த நிர்லேப வச்சுத
நிர்ச்சங்க நிருவிகற்பச்
சத்தியம தாகவே ஞானசுகமா யெங்குந்
தற்பரம் பேருருவதாய்ச்
சர்வபரி பூரணசி தாகாச மானநின் முளிணை
யிறைஞ்சி யேத்தப்
பத்தியாய் மலரெடுத் தர்ச்சனை நிதஞ்செய்து
பாடியா டித்துதித்துப்
பணிகின்ற வன்பருக் கஷ்டசித் திகளுதவு
பரமனே பரமகுருவே
சித்திமுத் திகளெனுஞ் செல்வம தெனக்கருள்
தேவனே ஜகதீசனே
செண்பமலர் மணம்வீச தென்றுவரை நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே. (உ)

எப்பொழுது நினதுதிரு நாமத்தை யேத்துபவ
ரிடரைத் தடுத்தருளுவாய்
இடையறா துன்னையே சிந்தித்த வன்பருக்
கின்பமே மிகநல்குவாய்

துப்பற்ற நினதருங் குருபூசை யைத்தினந்
துகளற முடித்தவர்க்குத்
தொலையாத வாயுளும் மேன்மேலு நீங்காத
சொர்ண பூடண மளிப்பாய்
தப்பற்ற வுனதுதிரு வாலயப் பணிமுதல்
தடாகத்தி னற்பணியையும்
தப்பாது செய்பவர்க் கஷ்டலட்சுமி யுதவு
தற்பரா தமியேன்மிகச்
செப்பொணுத் துன்பமதி லாந்துழ லனன்கதோ
தேவனே குருநாதனே
சென்பமலர் மணம்வீச தென்றுவரை நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே. (௯)

முன்னவர்கள் நீசெய்த வஷ்டமா சித்தியை
மொழிவர்பலர் பற்பலவதாய்
மூடனே னச்சித்தி யாவையும் புகலவே
முடியா தெனப் பயந்து
அன்னையே யப்பனே யையனே சற்குரோ
அருளனே கருணுகரா
ஆண்டவா வென்றுநான் வாயா லரற்றினின்
னடியிணையென் முடிசூடினேன்
பன்னகா சயனனுங் கமலமா மலரனும்
பாதல விசும்பு மெங்கும்
பலதினந் தேடியுங் காணுப் பரமவிப்
பதிதனிற் பரமகுருவாய்ச்
செந்நெல்வயல் சூழ்கின்ற வாலயந் தனிலுறாஉந்
தேவனே கிருபாநிதே

செண்பமலர் மணம்வீச தென்றுவரை நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே. (௬)

ஐயனே யென்னுடைய வறிவைக் கெடுத்தலையு
மாகா மனக்குரங்கை
யபரோட்ச ஞானமெனு வாளா லறுத்தந்த
வறிவா யிருக்கவருள்தா
துய்யனே மகரரவி நினதுதிரு நட்சத்ர
சுகிர்த மாம்பூசநாளில்
சுத்தசற் குரவநின் குருபூசை தவருது
தொன்மையாய்ச் செய்பவர்க்கும்
வையகம் புகழவே சற்புத்தி ரப்பேறும்
மாதனமு ஞானவருள்தா
மாபாவி யேனுநின் சந்நிதியில் வலம்வந்த
மாத்தி ரத்தேசுகந்தா
செய்யனே யின்னுமென் றேகத்துறும் பிணிக
டீர்த்திரட் சித்தருளுவாய்
செண்பமலர் மணம்வீச தென்றுவரை நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே (௭)

சந்ததமு நின்றிரு தடாகத்தின் மூழ்கியே
சர்வாங்க தூளணமதாய்ச்
சாற்றரிய வெண்ணீறு ருத்ராக்க சாதனத்
தாழ்வட மிகத்தரித்துப்
பந்தமற வெண்ணியே சிவயநம வென்றெவரும்
பரமநின் சந்நிதியிற்
பத்தியொடு சிந்தித்து நித்தமு முனைப்பரவி
பணிகின்ற வன்பருக்கு

எந்தவினை யாயினும் வெந்துபொடி சாம்பலா
யிச்சனனம் நீங்குவதுடன்
இகலோக சாதனமு மெண்ணிய படிக்குறாஉ
மேழையா னிவ்விதமதாய்ச்
சிந்தையிற் றுயருற்று நொந்துழல வழகதோ
தேவனே யருளாளனே
செண்பமலர் மணம்வீச தென்றுவரை நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே. (சு)

இல்லாது வாராது வெய்துவது போகாது
யென்றுமறை யாதியெல்லா
மியம்புவ துணர்ந்திருந் தேழையர்கள் போலவே
யிடருற்று விஷயாதியால்
நில்லாத வாக்கைதனை நிலையென்று நம்பியென்
னிலையைக் குலைத்துவிட்டு
நினைப்பொடு மறைப்பாதி துன்பத்தி லாழ்த்தியெனை
நெடுநா ளலைக்கழித்துப்
பொல்லாங்கு செய்யுமித் தூர்க்குண மனத்தைநீ
போக்குவது மன்றியெனது
போதபரி பூரண நந்தத் தழுத்துநின்
பொன்னடியை நம்புவோர்க்குச்
செல்லலை யகற்றவும் நல்லதை யளிப்பதுந்
தேவநின் பாரமலவோ
செண்பமலர் மணம்வீச தென்றுவரை நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே. (எ)

ஆக்கிக்கொ டுத்தலொ டழித்தலு மறைத்தருளு
மருவரீ யுருவமதுவா

யன்பர்களை ரட்சிக்க மனுட சற்குருவதா
யவதரித் தருளுதுரையே
சாக்கிமாத் திரமதாய் நின்றுபல தொழில்செய்து
தற்பத மடைந்தவர்சிலர்
சாற்றரிய துறவெய்தி நிச்சலா னந்தசுக
சாந்திபெற் றுய்ந்தோர்சிலர்
மூக்கினுனி யிற்சிலர் மூச்சைத் தடுத்துசிலர்
முத்திரை தரித்துபலவாம்
முத்தியை யடைந்துளா ரேழையேனெப்போது
மோக்ஷவா னந்தமூழ்கித்
தேக்கித்தி ளைப்பது நின்னையே சதமென்ற
சேயனேற் கென்றுபுகலாய்
செண்பமலர் மணம்வீச தென்றுவளை நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே: (அ)

காசினியி னின்பெருமை யாவர்சொல வல்லோர்கள்
கண்ணனய னுருத்ரன்
கழற முடியாதெனிற் கறையற்ற ஞானியின்
கனமகிமை யெங்களாலும்
ஏசற்ற மறையாலு மோதவரி தாகுமென்
றெண்ணற்ற நூலின்வழியா
லேழையான் கண்டிருந் துன்பெருமை நாயினே
னெப்படிச் சொல்லவல்லேன்
பேசரிய பல்பிணிகள் பில்விரு ளியமாதி
பெரிய நின்பேருரைக்கில்
பிறங்குபக லவன்முனே பனித்துளிகள் போலவே
பின்னிடைந் தோடிவிடுமே

தேசாதி தேசவர்வணங்கு பரதெய்வமே
சிறியேனை யாள்வதென்றோ
செண்பமலர் மணம்வீச தென்றுவனா நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே. (௬)

எத்தனைவி தங்களால் நேர்ந்திடு மெனக்குநின்
னிதயமு மிரங்காததை
யென்னென்று சொல்லுவேன் வல்லிருங் கல்லோ
யிரும்பதோ கெட்டிமரமோ
பித்தனே யாயினும் பெற்றவர்கள் பிள்ளையைப்
பேணுதொ ழிப்பதுண்டோ
பேருலகில் யாவருங் காவடிகள் கட்டியும்
பெரியதோர் சிகைமழித்தும்
அத்தனே யின்னமும் பற்பல பிரார்த்தனைக
ளன்போடு நேர்ந்துகொண்ட
வடியவரைக் காத்தவா கொடியவரை வதைத்தவா
வமலனே யமரர் போற்றுஞ்
சித்தனே யென்துய ரகற்றியே நீங்காத
திறமான நிட்டையருள்வாய்
செண்பமலர் மணம்வீச தென்றுவனா நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே. (௰)

ஆரார்க ளுன்னுடைய காணிக்கை குறையாம
லன்போடு சேர்க்கு மடியார்
அவர்கட்கு மளவற்ற சம்பத்தை யீவது
மப்பொருளு முதலானதைச்
சோராத வாசையா லபகரித் துண்கின்ற
துட்டமா பாவிகட்குத்

தொலையாத துக்கமெனும் வாரியி லமிழ்த்தலுஞ்
சுவாமிநின் வலதல்லவோ
தாராத வருளெலாந் தந்தருள் நின்னையே
சார்வதா நம்பினேற்குத்
தப்பேது மில்லாத வொப்புவமை யற்றதோர்
சைதன்ய நிலையையருள்வாய்
சீரான வுன்னுடைய சந்நிதியு நின்னையே
சேவைபுரி யன்பர்வாழி
செண்பமலர் மணம்வீச தென்றுவனை நகர்வாச
ஸ்ரீராம லிங்கேசனே. (௰க)

முற்றிற்று.

---

வேறு

பண்-நட்டராகம்.

தேவாதென்றுவனை யுறைச் சின்மயராமலிங்கா
நீவாயிக்கணமே நினைப் போமெறைப்பகற்ற
பாவாலுன்புகழைச் சொலும் பத்தர்தமக்கிரங்கி
ஈவாய்கேட்டதெலா மெழி லாருமிருங்குருவே. (க)

குருவேநிற்குணனே வுயர் கோதகல்வார்புகலும்
அருவேநிட்களனே அகண் டானந்தப்பேரொளியே
மருவேதென்றுவனை யுறு மாமணிராமலிங்கா
கருவேநீக்கியருள் கரு ணாகரசிற்சுகனே. (உ)

சுகமேநின்னடியைத் தொழுந் தொண்டர்தமக்கருள்கற்
பகமேநின்னடியேன் மனப் பற்றறுத்துன்பதியில்
மகமேயெற்களு முயர் வானவர்சந்ததமும்
இகமேவந்திறைஞ்சுங் குரு வீசனேயெம்மிறையே. (௩)

இறைப்போதுன்னடியை யெளி யேன்மறவாதிருந்துங்
கறைப்பேய்நெஞ்சமெனுங் கருங் கல்லைக்கரைத்தருள
மறைப்பேதுன்றனுக்குப் பெரு மாமறைசொல்லரிய
சிறப்பேயெற்குதவுங் குரு ராமலிங்கத்திருவே. (௪)

திருவேசெண்பவன மெனுந் தென்றுவராபுரியிற்
குருவாய்வந்துதித்த அன்பர் கோரிக்கையின்படியே
தருவாயவ்வவர்கள் பல சஞ்சலநீத்தவரு
ளுருவேயென்கவலை கடிந் தோட்டிடுமெய்ப்பொருளே. (௫)

பொருளேபூரணனே புவி பெண்ணெனும்பொன்முதலா
மிருளாராக்கையைநா னென தென்றெண்ணிளைத்தகன
மருளேதொன்றுமிலா மன வாக்குக்ககோசரமாந்
தெருளேயீந்தருளுஞ் சிவ சிற்சுகதற்பரனே. (௬)

பரனேநின்னையன்றித் துணை பாதலத்தும்விசும்பும்
அரனேயாருமிலே னறி வாஞ்சுகவற்புதனே
திறனேயெங்குநிறை பர சித்தொடுசேர்ந்திலங்கு
மறனேயென்னிடரை யறுத் தாண்டிடுங்கண்மணியே. (௭)

மணியேவுள்ளொளியே மறை வாக்கின்முடியிலங்கும்
அணியேயச்சுதனே யறி வானந்தநிச்சலனே
திணிசேர்வல்வினையாற் றிளைத் தேயிளைத்தேயுழலாப்
பணியேநின்னடியைப் பணித் தேத்தப்பணித்தருளே. (௮)

அருளேயாரமுதே நினை அண்டினஅன்பரெனும்
நருளாமியாவர்கட்கும் நலந் தந்தருள்நாயகனே

உருளாதெப்பொழுது முணர் வேயுருவாயிருக்க
வெருளேன்வந்தடைந்தேன் றனி வீடருள் மேலவனே. (௯)

மேலாநன்னிலையைப் பலர் மேவிமெய்வீடடைந்தும்
மாலாம்வன்மனப்பே யெனை வாட்டிவதைத்தலனு
கூலாநின் றனக்குத் தகுங் கொள்கையன்றேகுணத்திற்
சீலாதென்றுவரை வளர் சித்தனதேசிகனே. (௰)

தேசுடையாலயத்தின் றட நந்தவனச்சிறப்பு
மாசகல்பல்விருக்ஷந் தெங்கு மாவளர்சோலைகளு
மேசறுநின்மடத்தின் புக ழேவர்சொலத்தகுவார்
பேசருமுன்றலத்தை அன்பர் பெற்றிடல் நின்கடனே. (௰௧)

முற்றிற்று.

---

வேறு

பண்-திருநேரிசை.

பத்தராய்ப்பணிவோர்க்கெல்லாம் பவமுதற்பன்னோய்தீர்த்துச்
சித்தியுமோக்ஷநல்குந் தேவனேதேவர்தேவே
சுத்தமாந்தென்றுவாரைத் தொல்பதிக்கிறையாய்த்தோன்று
முத்தனேராமலிங்க முதல்வனேமுனியேபோற்றி. (௧)

வாதனைவசத்தாலிந்த வன்பவக்கடலின்மூழ்கிக்
காதலாந்திரையிற்பட்டுக் கடையனேன்றுயரிலாழ்தல்
நீதமோநெடியோயன்பர் நித்தமும்வணங்குஞ்செம்பொற்
பாதனேராமலிங்கப் பரமசற்குருவேபோற்றி. (௨)

நேற்றுளாரின்றிலாமை நேரதாய்த்தேர்ந்திருந்துஞ்
சோற்றினாலமைந்தவாக்கை சுதந்தரமெனவுமெண்ணிக்
காற்றுளபோழ்தேதூற்றுங் கருத்தைவிட்டுலகமாயைச்
சேற்றிலேயுழனன்றோ சிற்பரகுருவேபோற்றி. (௩)

எண்ணிலாச்சீவனுக்கு ளெடுத்திடுமெனுடதேகம்
நண்ணியுநன்மைதீமை நன்குறவுணர்ந்தும்ஞானக்
கண்ணினாலெனைநான்கண்டு கவலைநீத்ததுவாயென்றும்
புண்ணியாயிருப்பதென்றோ போதசற்குருவேபோற்றி. (௪)

பண்டுமாமறையாலியாரும் பகரொணாப்பரமதேவே
மண்டலத்துறையுஞ்சீவர் மாதவப்பேற்றால்வந்து
வண்டினம்பாடுஞ்சோலை வளமிகுந்துவரைமன்னித்
தொண்டருக்கருளும்ராம சோதிலிங்கேசாபோற்றி. (௫)

நினதருஞ்சரிதையாவு நினைத்தவக்கணமேயார்க்குங்
கனலெதிர்மெழுகாயுள்ளங் கரைந்துநெக்குருகுமந்தோ
மனமெனுங்கொடியமாயை மயக்கொழித் தெனதுமோன
நனவதிற்சுழுத்திதந்தாள் நாதசற்குருவேபோற்றி. (௬)

ஆதியுநடுவீறில்லா வமலனேஜனனமாதிப்
பீதியாற்றளர்ந்துநொந்த பேதையேனுனையேசார்ந்தும்
சோதியாதெனதுஜோதிச் சுகப்பொருடோன்றச்செய்வாய்
கோதிலாராமலிங்கக் குருபரகுகனேபோற்றி. (௭)

அண்ணலேயரசமோன வருட்பெருங்கடலேமேலாம்
விண்ணவர்க்கரியோய்தூய வேதியாவேதகீதா
மண்ணவர்பலரும்போற்று மாதவாவொளிருஞானக்
கண்ணனேராமலிங்கக் கடவுணின்பாதம்போற்றி. (௮)

அத்தனேஅயன்மால்தேடு மருட்பெருஞ்சுடரோபொல்லா
மத்தனேன்மயக்கநீக்க மானுடவடிவாய்த்தோன்றுஞ்

சித்தனேயணிமாவாதிச் சித்திகளியற்றுந்தேவே
பித்தனேன்கவலைதீர்த்தாள் பிரமசற்குருவேபோற்றி. (௯)

அப்பனேயகண்டானந்த மடியருக்கருளுந்தேவே
ஒப்பிலாவொருவாவுன்னை யோலமிட்டலறிநைந்தேன்
துப்பெனுமறிவானந்தச் சுகக்கடறோய்வதென்றோ
சொப்பிரகாசாமோன சோதிசற்குருவேபோற்றி. (௰)

ஐயனேயசலானந்த வாண்டவாதுவளைவாழும்
மெய்யனேபிறவிவேலை வேதனைக்கினிவராமல்
வையகம்புகழுமோன வரிட்டநன்னிலைதந்தாளுந்
துய்யனேராமலிங்கச் சுத்தசற்குருவேபோற்றி. (௰௧)

போற்றிநீறணிந்துமேலாம் பொற்புறுமக்கமாலை
சாற்றிநற்சிவவோமென்னுந் தட்சணத்துணையேசார்வா
ரேற்றினேன்றுயரின்மூழ்கி யேங்குமுத்தாபந்தன்னை
மாற்றியென்சொருபத்தாழ்த்து மாதவாபோற்றிபோற்றி. (௰௨)

முற்றிற்று.

## வேறு

## திருத்தாண்டகம்.

பாரானைநதியானைத்தீயானானைப் பரிதிமதிமாருதம்விண்பரமான்மாவாம், பேரானைப்பெண்ணிலியையாணிலானைப் பேடிலியையெங்குநிறைபெம்மானானை, சீரானைத்தென்றுவளைநகரில்வாழுஞ் சின்மாத்ரராமலிங்கச்செல்வனென்னா, மேரானையடியவருக் கெளியான்றன்னையென்னகத்திற்கண் குளிரக்கண்டேனானே. (௧)

நல்லானைநல்லவர்க்குநன்கேசெய்யும் நாயகனைமாயவனைநலமொன்றில்லாப், பொல்லார்க்கும்பொல்லானாம்புனிதன்றன்னைப் போதவனையாதவனைப்புலன்கள்வென்ற வல்லார்க்குஞ் சிற்சுகத்தைநல்குங்

கோவை வளம்பொழில்சூழ்தென்றுவணைநகரில்வாழு, மெல்லானைராமலிங்கவிறைவன்றன்னை யென்னகத்திற்கண்குளிரக்கண்டேனானே.

அத்திமுதலெறும்புகடைபலவாஞ்சீவர்க் கந்தரியாமிப்பொருளாயசலமான, சத்தியஞானானந்தவடிவாய்நின்ற தற்பரனையற்புதனை தமியனேற்காய்ச், சித்திபுரிதென்றுவணைநகரில்மேவிச செயராமலிங்கமெனநாமம்பூண்டு, எத்திசையுமெங்குநிறையெம்மான்றன்னை யென்னகத்திற்கண்குளிரக்கண்டேனானே. (௩)

குருடர்கண்டயானையெனுமுவமையேபோற் குணங்குறிகள்பலவேறுகொள்கைவேறாய், மருளுறுபல்சமையமெனுங்குழியிலாழ்ந்துமரித்துதித்தலெனுங்கொடியமயக்கம்தீர்க்குந், தெருளுருவேதென்றுவரைநகரில்வந்து சிவராமலிங்கமெனநாமந்தாங்கி, யிருளகற்றுங்குருமணியையினியதேனை யென்னகத்திற்கண்குளிரக்கண்டேனானே. (௪)

முன்னவனாய்மூவுருவமூர்த்திதானே மோகமெனுமாழிதனில்மூழ்கிநீங்காச், சின்னவனாய்விருப்புவெறுப்பாதிதன்னிற் றியக்குறுமென்சிந்தைதனைத்தெளியச்செய்த, மன்னவனாய்ச்செண்பகவாரணியந்தன்னில் மாதேவராமலிங்கவடிவாயுற்ற, இன்னவனையென்னுருவாயிலங்குந்தேசை யென்னகத்திற்கண்குளிரக்கண்டேனானே. (௫)

தந்தையன்னைதுணைவர்சுற்றம்பெண்டிர்மக்கள்தாழ்மையுயர்தீமைநன்மையணிமைசேய்மை, பந்தமுத்தியெனுமிருமைப்பகையிற்பட்டுப்படுகுழியில்வீழுமெனைப்பரத்திலேற்ற, அந்தணர்சூழ்தென்றுவரைநகரந்தன்னி லருள்ராமலிங்ககுருவடிவாய்த்தோன்றி, எந்தனிடர்நீக்கியருளீசன்றன்னை யென்னகத்திற்கண்குளிரக்கண்டேனானே. (௬)

சருமாதியாறுமுறுந்தூலதேகஞ் சாற்றுமொருசூக்கதனுமூலதேக, மிருமையதாமசத்துமுதற்றுக்கமீறா யேசுமிகுமைங்கோசக்குகையைநண்ணி, யொருமையதாந்தனைமறந்துபவநோயுற்றிங்குழலுமெனக்குணர்வளிக்கத்துவரைமன்னுங், கருணையுருராமலிங்கக்கடவுடன்னைக் கண்களிக்கவென்னகத்திற்கண்டேனானே. (௭)

நற்றவத்தாருள்ளமெனுங்கோயினண்ணி நானெனதாமகங்கார மமகாரத்தின், பற்றகலார்வன்மனத்திற் பற்றுதோனுய்ப் பரஞ்சுடராம்பத்தர்தமக்கருளும்பாதன்,பொற்றலமாங்கென்றுவரைவதியுங்கோமான் பூரணனும்ராமலிங்கப்புனிதனன்றுய்க், கற்றவர்க்குங்காண்பரியகாட்சியானைக் கண்களிக்கவென்னகத்திற்கண்டேனுனே. (௮)

அன்னியமில்சரவசரவுயிர்களியாவு மங்கங்குந்தானுநவமர்ந்தவீசன், நன்னிலையிலனவரதநாட்டமுற்ற ஞானிகட்குச்சத்தியசிற்சுகத்தைநல்கிப், பொன்னிநதிசூழ்ந்திலங்குந்துவரைமன்னும் போதமயராமலிங்கதருவைநாளும, என்னிதயாம்பரத்தில்மிகுந்திலங்குந்தேவை எப்பொழுதுந்தானுகக்கண்டேனுனே. (௯)

கார்வணனுநான்முகனும்பன்னுடேடிக் காண்பரியமுக்கணனே கடையனேற்காய், சிரிலங்குந்தென்றுவரைநகரைச்சார்ந்து ஸ்ரீராமலிங்கருவெனப்பேர்பெற்றுத், தார்நிறைந்தநந்தனஞ்சூழ்தடமுஞ்சோலை தனிலமர்ந்துசந்தனந்தார்சாந்தும்பூண்ட, ஏர்நிறைந்தசின்மயனுந்துரியவாழ்வை யென்னகத்திற்கண்குளிரக்கண்டேனுனே. (௰)

முற்றிற்று.

---

## வேறு-காம்போதிராகம் அடதாளம்.

சீர்மிகுந்திருச்செண்பகவனச்-சேத்திரத்துறைவா
யெங்குநிறைவா, அன்பர்க்கிறைவா அடியேன்
செல்வமே, செல்வமே, செல்வமே-சின்மயப்பொருளே யருளே. (௧)

ஏர்மிகுந்தவராமலிங்கவுன்-இணையடிதொழுதும்
நினைந்தழுது, முளமுழுதுங் கசிந்தும்
ஏங்கினேன், ஏங்கினேன், ஏங்கினேன்-இதுதகுமோ அறியேன்.(௨)

சூட்டுக்கோற்கையிற்றோன்றவந்தருட்-சோதியேசுடரே
பரஞ்சுடரே, யெந்தனிடரைத்தொலைத்தாள்
சுத்தனே, சுத்தனே, சுத்தனே-சுகந்தருவாய் அத்தனே (௩)

வாட்டுமென்னுளடைவல்வினைதவிர்-மாதவச்சுரனே
குருபரனே, நிரந்தரனே-யென்மீதில்
வன்மமோ, வன்மமோ, வன்மமோ-இன்னுமறியேன் பரனே. (௪)

ஐயனேபுனைநம்பு மென்றனக்-காதரவிலையே
மனநிலையே, யின்னும்வலையே-யெனப்பா
ஆதியே, ஆதியே, ஆதியே-யெனைக்கைவிடாதருள்வாய். (௫)

வையகம்புகழ் ராமலிங்கவுன்-மகிமையைச்சிறியேன்
பகுத்தறியேன், ஒன்றுங்குறியேன்-வறியேன்
மாதவா, மாதவா மாதவா-மலரடிக்காட்செய்குவாய். (௬)

பத்தகோடிகள் நித்தமுந் தொழு-முத்தம குருவே
பரவுருவே, தேவதருவே-திருவே
பாவியேன், பாவியேன், பாவியேன்-பவந்தொலைத்தாள் பரனே. (௭)

சித்திமுத்தியின் பேறெனக்கருள்-தேசிகச்சிவனே
கடலவனே, மலரவனே-யின்னமுந்
தேவனே, தேவனே, தேவனே-தியங்கிடவுந்தகுமோ. (௮)

வேதசாத்திரமனைத்து மோதினும்-வேட்கைகளறுமோ,
மனமிறுமோ-நிலைபெறுமோவுலகில்
வித்தகா, வித்தகா, வித்தகா-வெறும்வாதமே தருமே. (௯)

போதமாம்விழிதிறந்தனுதினம் பூரணவெளியில்
பரவொளியில், மனந்தெளியி-லெவர்க்கும்
புண்ணியா, புண்ணியா, புண்ணியா-ஜென்மம் வருமோபுகலாய்.(௰)

பெண்டுபிள்ளைகள் சம்பத்தென்றிடும்-பேய்களெனைப்பிடித்து
மதிகெடுத்து, அலைக்கழித்துத்-தடுத்து
பின்னுமே, பின்னுமே, பின்னுமே-பிறந்திறந்தேயிளைத்தேன். (௰௧)

தண்டளபனேசற்குருவதாய்த்-தன்னேயேயளித்தும்
மனங்களித்தும், யெனேத்தெளித்தும்-மருண்டும்
சார்வதா, சார்வதா, சார்வதா-மனதுழலல்நலமோ. (௰௨.)

மண்டலத்துறை சீவர்வந்துனே மாதவா அறிவை
யெனக்கருள்வை, தயைபுரிவை-யெனத்தம்
வாக்கினல், வாக்கினல், வாக்கினல்-தினந்துதித்தவர்க்கு. (௰௩)

எண்டிசை புகழ்கோலினுலுனே-யிக்கணஞ்சுகுவேன்
குழம்பிடுவே, னருளிடுவே-னெனச்சொல்
எந்தையே, எந்தையே, எந்தையே-யென்னபுதுமையறியேன். (௰௪)

என்னசொல்லினுமேழையேன்மீதில் இரக்கமுமிலேயோ
மனஞ்சிலேயோ, நலம்வலேயோ-யினியான் [ள்வாய்.
என்செய்வேன், என்செய்வேன், என்செய்வேன்-இடர்தொலேத்தேயரு

அன்னேதந்தையுங் குருவுந்தெய்வமீயாகவேநினேந்துந்
தினம்புகழ்ந்து, முனேப்பணிந்தும்-துதித்தேன்
ஆண்டருள், ஆண்டருள், ஆண்டருள்-நினதடிமையபயம். (௰௫)

இராமலிங்கசுவாமி தோத்திரப்பதிகங்கள்

முற்றிற்று.

இப்புத்தகம் வேண்டியவர்கள் ஷியூர் பெரியகடைத்தெரு ஜவ ளிவியாபாரம் மகா-௱-௱-ஸ்ரீ வீ-குட்டிமுதலியார் கடையில் பெற்று க்கொள்ளவும்.

இதன் விலே அணா-க.